# வீரமணி வென்றிடுக!
# வெற்றிமணி ஒலித்திடுக!

## தலைவர் கலைஞர்

தி.மு.க. அறக்கட
பேராசிரியர்
ஆய்வக நூல்
நிலையம்
சென்னை-18
அண்ணா அறிவா

## இந்நூல்...

மத்திய அரசின் இந்தித் திணிப்பை எதிர்த்துத் தமிழக மக்கள் நடத்தி வரும் தொடர்ச்சியான போராட்டத்தின் தொடர்பாக, திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் தளபதி கி. வீரமணி அவர்கள் தமது இயக்கத் தோழர்களுடன் ரயில் நிலையங்களில் இந்தி எழுத்து அழிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டதை யொட்டி, 21—9—1985 அன்று சென்னை பெரியார் திடலில் நடைபெற்ற வழியனுப்புக் கூட்டத்தில் தலைவர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை இச்சிறு நூல் வடிவில் தலைமைக் கழகத்தால் வெளியிடப்படுகிறது.

**விலை 50 காசு**

வெளியீடு :-

தி. மு. க. தலைமை நிலையம்
''அன்பகம்'' தேனாம்பேட்டை
சென்னை – 600 018.

# வீரமணி வென்றிடுக!

# வெற்றிமணி ஒலித்திடுக!

---

'சென்று வா மகனே செருமுனை நோக்கி!' என்று வழியனுப்பப் பெரியார் இல்லை! 'வென்று வா தம்பி, வீரமணி!' என்று வழி யனுப்ப அண்ணா இல்லை. 'உறுதியாக வெற்றியினைப் பெற்றிடுவீர்!' என்று வழியனுப்ப உடன் பிறப்புகளாகிய நாமெல்லாம் இங்கே குழுமியிருக்கின்றோம்.

இந்த வழியனுப்பு விழா ஐந்தாவது கட்ட இந்தி ஆதிக்க எதிர்ப்புப் போராட்டத்தினுடைய தொடக்க விழா என்று சொன்னால், அது மிக பொருத்தமுடையதாக இருக்கும்!

முதல் கட்டம், இரண்டாவது, மூன்றாவது, நான்காவது கட்டங்கள் நம்முடைய மொழிப் போராட்ட வரலாற்றில் எத்தகைய நிகழ்ச்சிகளை உள்ளடக்கியவை என்பது குறித்து இங்கே தளபதி வீரமணி அவர்களும், நண்பர் கிள்ளிவளவன் அவர்களும், வழியனுப்பு விழாத் தலைவர் சாமிதுரை அவர்களும், போராட்ட வீரர் நன்னன் அவர்களும், அம்மையார் திருமதி பட்டு பாவலர் அவர்களும் எடுத்துக் கூறியிருக்கின்றார்கள்.

இந்தி எதிர்ப்புப் போராட்டத்துக்கு — நம்முடைய மொழிப் போராட்ட வரலாற்றுக்கு — வயது ஏறத்தாழ நாற்பத்தேழு முடிந்து நாற்பத்தெட்டு நடப்பதாக இங்கு எடுத்துக் கூறப்பட்டது.

என்னுடைய பொது வாழ்க்கையினுடைய வயது கூட நாற்பத்து ஏழுதான். நான் பொது வாழ்க்கையிலே ஈடுபட்டதே இந்தி எதிர்ப்புப் போராட்டத்திலேதான்! 1936 ஆம் ஆண்டு திருவாரூர் உயர்நிலைப் பள்ளி மாணவனாகச் சேர்ந்து, 1937 ஆம்

ஆண்டு என்னுடைய வகுப்பிலே 'நான்டிட்டயில்' என்கின்ற வகையிலே எனக்கு வழங்கப்பட்ட புத்தகம் பனகல் அரசருடைய வரலாறு.

ஏறத்தாழ நாற்பது அல்லது நாற்பத்தைந்து பக்கங்கள் கொண்ட பனகல் அரசருடைய வரலாற்றை முதல் வரியிலே யிருந்து கடைசி வரி வரையிலே மனப்பாடமாக ஒப்பிக்கக் கூடிய, அந்த வகுப்பினுடைய முதல் மாணவனாக நான் அன்று இருந்தேன்.

1937—38 காலகட்டத்திலேதான் இந்தி ஆதிக்கம் தமிழகத்திலே தலைகாட்டத் தொடங்கியது. 1938 ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில், நான், இங்கே பாராட்டுக்களைப் பெற்ற புவனகிரி நமசிவாயத்தைப் போலவோ, அல்லது பேரறிஞர் அண்ணா அவர்களைப் போலவோ, மற்றும் பல தலைவர்களைப் போலவோ, போராட்டத்தினுடைய சர்வாதிகாரி எண் ஒன்று, இரண்டு என்கின்ற அந்தப் பட்டியலிலே இடம் பெற முடியா-விட்டாலும்—இடம் பெறக்கூடிய வயதினை நான் பெற்றிரா விட்டாலும்—தமிழகத்திலே ஒவ்வொரு ஊரிலும் நாள் தோறும் நடைபெற்ற இந்தி எதிர்ப்பு ஊர்வலங்களில் — திருவாரூர் தெருக்களில் நடைபெற்ற ஊர்வலங்களில் கலந்து கொண்டு பாவலர் பாலசுந்தரத்தினுடைய பாடலை—

"ஓடிவந்த இந்திப் பெண்ணே கேள் — நீ
தேடிவந்த கோழையுள்ள நாடு இது அல்லவே !"

என்று பாடிக்கொண்டு சென்ற இளம் மாணவனாக இந்தி எதிர்ப்புப் போராட்டத்திலே அடியெடுத்து வைத்தவன் நான் !

எனக்கு இன்னும் பசுமையாக நினைவு இருக்கிறது. அன்றைக்கு பிரதமர் என்கின்ற பொறுப்பிலே இருந்த இராசகோபாலாச்சாரியார் கட்டாய இந்தியை நுழைத்த போது, அவர் தமிழ்த்தாயைக் கொலை செய்கிறார் என்பதைச் சுட்டிக்காட்டு கின்ற வகையில், இராஜாஜி கையிலே ஒரு கட்டாரி — அதிலே 'இந்தி' என்கின்ற எழுத்துக்கள் ! அந்தக் கட்டாரியைத் தமிழ்த் தாயினுடைய உடலிலே பாய்ச்சுவதைப் போல ஓங்கிய கையோடு இராசகோபாலாச்சாரியினுடைய உருவமும் அதைப் பார்த்துக் கலங்குகின்ற வகையிலே தமிழ்த்தாயினுடைய உருவமும் வரையப் பட்டு — ஊர்வலத்தினுடைய முன்பகுதியிலே அது எடுத்துச் செல்லப்படும். பின்னர் அணிவகுத்துச் செல்கின்ற நாங்கள் பாடிக்கொண்டே போவோம் !

அன்றைக்கு இந்தியை எதிர்த்துப் பல வாலிபர்கள் தங்களுடைய உயிரையே தியாகம் செய்ய முன்வந்தார்கள்! தாளமுத்து-நடராசன் என்கின்ற பெயர்களைத் தளபதி வீரமணி இங்கே உச்சரித்த பொழுது எவ்வளவு உணர்ச்சி மயமாக அந்தச் சொற்கள் வந்து விழுந்தன என்பதை நாமெல்லாம் கவனித்தோம்

இந்தி எதிர்ப்புப் போராட்டத்தை நினைக்குந்தோறும் தாளமுத்து-நடராசன் புதையுண்ட கல்லறை நோக்கி நமது வீரவணக்கத்தைச் செலுத்த வேண்டியது நம்முடைய கடமையாகும்.

அதைப்போலவே அன்று பலபேர் உண்ணு நோன்பு இருந்து தங்களுடைய உயிரை விடவும் முன்வந்தார்கள். தந்தை பெரியார் அவர்கள் உண்ணு நோன்பு — தேவையற்றது என்று எடுத்துச் சொல்லித் தடுத்து நிறுத்திஞர்கள்.

இங்கே வருகை தந்திருக்கின்ற அம்மையார் பட்டம்மாள் அவர்களின் துணைவர் அண்ணன் பாலசுந்தரம் நல்ல கவிஞர். அவர் எழுதிய பாடலை பல இடங்களிலே — இந்தி எதிர்ப்புப் போராட்ட நிகழ்ச்சிகளில்—இந்தி ஆதிக்கத்தை எதிர்த்துப் பேசப் படுகிற கூட்டங்களில் நான் கூருமல் இருப்பதில்லை.

அந்தக் காலக்கட்டத்திலேதான், நண்பர்கள் இங்கே குறிப் பிட்டதைப்போல், திருச்சியிலிருந்து தமிழர் படை தளபதி அழகிரி அவர்களுடைய தலைமையில், மணவை திருமலைசாமி, மூவலூர் மூதாட்டியார் இராமாமிர்தம் அம்மையார் இப்படிப் பட்டவர்களுடைய வழிகாட்டுதலோடு, சென்னை வரையிலே— வரும் வழியெல்லாம் ஒவ்வொரு ஊரிலேயும் முகாமிட்டு இந்தி எதிர்ப்புப் பிரச்சாரத்தைச் செய்து கொண்டே வந்தார்கள்.

அந்தப்படை வருகிற வழியில் அன்றைக்குக் காங்கிரசார் ‘இந்தி பரவுக!’ என்கின்ற துண்டறிக்கை வெளியிட்டு மக்களிடத் திலே ஆயிரக்கணக்கிலே வழங்கினுர்கள் அது மாத்திரமல்ல; அண்ணன் அழகிரிசாமி நடத்திவந்த படையினை அவமானப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தோடு ஓர் ஊரிலே செருப்புத் தோரணத்தைக் கட்டி வைத்து அவர்களைக் களங்கப்படுத்தி விட்டதாகக் கழிபேருவகை கொண்டார்கள்.

அண்ணன் அழகிரி செருப்புத் தோரணம் கட்டப்பட்ட இடத்தைக் கடக்காமல், அதற்கு முன்னாலே நின்று கொண்டு, ஒரு முக்காலியின் மீது ஏறி நின்று ஒரு மணி நேரம் 'இந்தியை என்ன காரணத்திற்காக நாம் எதிர்க்கிறோம்?' என்பதற்கான விளக்க வுரையாற்றினார்; செருப்புத் தோரணம் கட்டியவனே தன் கையாலே அதை அவிழ்த்துவிட்டு இவர்களை வழியனுப்பி வைத்தான் என்கின்ற இந்த நிகழ்ச்சியெல்லாம் நம்முடைய மொழிப் போராட்டத்தின் வரலாற்றுப் பகுதிகளாகும்.

இப்படி 1938 ஆம் ஆண்டு தொடங்கிய இந்தப் போராட்டம் இன்றளவும் தொடர்ந்து நடைபெற வேண்டிய அவசியம் உள்ளது.

அண்ணா அவர்கள் ஆட்சிப் பொறுப்பிலே அமர்ந்து, கழகச் சட்டப் பேரவையிலே "இனித் தமிழகத்திலே மும்மொழித் திட்டம் இல்லை; இருமொழித் திட்டந்தான் — தாய்மொழியாம் தமிழ்மொழி, ஆங்கிலம். இந்திக்கு இடமில்லை. அதனால் இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட இந்தி ஆசிரியர்களுக்கு வேலையில்லை என்கின்ற நிலைமை ஏற்படுமேயானால் அவர்கள் வேறு வேலை பார்க்க வாய்ப்பு அளிக்கப்படும்" என்று அறிவித்தார்கள்.

## அளிக்கப்பட்ட உறுதிமொழிகளின் கதி என்ன ?

தமிழகத்தினுடைய பள்ளிகளிலே இந்திக்கு வேலையில்லை. அண்ணா முதலமைச்சராகப் பொறுப்பேற்று அந்தக் கடமையைச் செய்து முடித்தார். என்றாலுங்கூட இன்றைக்கும் இந்தப் போராட்டத்தை தளபதி வீரமணி தலைமை தாங்கி நாளைக் காலையிலே நடத்த வேண்டியிருக்கிறதே, இதற்கு என்ன காரணம்?

அளிக்கப்பட்ட உறுதிமொழிகள் ஒழுங்காக நிறைவேற்றப் படவில்லை.

இந்தியாவினுடைய பிரதமராக இருந்த பண்டித ஜவஹர்லால் நேரு உறுதிமொழி வழங்கினார். அதற்கடுத்து லால்பகதூர் சாஸ்திரியும் இந்திரா காந்தி அம்மையாரும் உறுதிமொழி வழங்கினார்கள். அந்த உறுதிமொழி அப்படியே இருக்கிறது. அது செயல்படுத்தப்படுகிறதா என்றால் இல்லை.

மறைமுகமாக—கொல்லைப்புறமாக—மெல்ல மெல்லத் தமிழ்ச் சமுதாயத்தினுடைய உடலிலே—உணர்விலே—தமிழ் மொழியிலே விஷம் ஏற்றப்படுகின்ற நிலையினை நாம் காண்கிறோம். அதை

இந்த ஒரு கட்டத்திலே தடுத்து நிறுத்தாவிட்டால், தமிழகத்தை எதிர்காலத்திலே காப்பாற்றவே முடியாது என்ற ஒரே காரணத்தினாலேதான், நாளைய தினம் திராவிடர் கழகத்தினுடைய போர் மறவர்கள் தளபதி வீரமணி அவர்களுடைய தலைமையிலே போராட்டத்திலே ஈடுபடுகின்றார்கள்.

கடந்த கால வரலாற்றை நோக்கினால், எத்தகைய உறுதி மொழிகள்—யார் யாரால்—எந்தெந்த வகையிலே—தரப்பட்டன என்பதை மிகத் தெளிவாக உணர முடியும்.

1959-ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 7ஆம் நாள் நாடாளுமன்ற மக்களவையில் ஒரு தனி நபர் தீர்மான விவாதத்திலே குறுக்கிட்டுப் பேசும்போது பண்டித நேரு சொன்னார்.

''இந்தித் திணிப்பு கூடவே கூடாது!''

இரண்டாவதாக; கால வரம்பற்ற—நீண்ட காலத்திற்கு; அது எவ்வளவு காலம் என்பது எனக்குத் தெரியாது. ஆங்கிலத்தைக் கூட்டு ஆட்சி மொழியாக (Associate Additional Language) நீடிக்க விரும்புகிறேன். மக்கள் விரும்புகிற வரை ஆங்கிலத்தை நீடிக்க வைப்பேன்.

ஆங்கிலம் இனி நீடிக்கக் கூடாது என்ற முடிவினை நான் இந்தி பேசுகிற மக்களிடம் விடமாட்டேன். அதை முடிவு செய்ய வேண்டியது இந்தி பேசாத மக்களேதான்.''

நேருவின் உறுதிமொழியிலே உள்ள முக்கியமான நான்கு அம்சம் :

இந்தித் திணிப்பு கூடாது.

ஆங்கிலம் கூட்டாட்சி மொழியாக நீடிக்க வேண்டும்.

மக்கள் விரும்புகிற வரை ஆங்கிலத்தை நீடிக்கவைப்பேன். அதாவது ஆங்கிலம் நீடிப்பதற்குக் காலவரம்பே கிடையாது

ஆங்கிலம் கூடாது என்கின்ற முடிவினை எடுக்க வேண்டியவர்கள் இந்தி பேசுகின்ற மக்கள் அல்ல—இந்தி பேசாத மக்கள் தான்.''

— இது 1959 ஆம் ஆண்டு இந்தியப் பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களால் அளிக்கப்பட்ட உறுதிமொழி !

பிறகு 1963 ஆம் ஆண்டு பண்டித நேரு நாடாளுமன்றத்திலே மேலும் கூறிய போது

''நான் அன்று கொடுத்த — இன்றுங் கடைபிடிக்கிற—அந்த வாக்குறுதிக்கான காரணம் அல்லது நோக்கம் என்ன? இந்தி பேசாத மக்களின் பூரண சம்மதத்தைப் பெறுகிற வரையில் ஆங்கிலம் அல்லது இந்தி நிலையில் எந்த வித மாற்றமும் செய்யக் கூடாது. ஏனென்றால், நாடாளுமன்றத்திலோ அல்லது வெளியிலோ மெஜாரிட்டி பலத்தை வைத்துக் கொண்டு அவர்களால் ஒப்புக்கொள்ள முடியாத மாற்றம் செய்யப்பட்டு விடக்கூடும் என்று இந்தி பேசாத மக்களிடத்திலே நிலவும் பயத்தைப் போக்குவதற்காகவே நான் அப்படி வாக்குறுதி கொடுத்தேன்'' என்று குறிப்பிட்டார்.

அதற்குப் பிறகு, 1965 ஆம் ஆண்டு, பிரதமர் லால்பகதூர் சாஸ்திரி மார்ச் மாதம் 12ஆம் தேதியன்று நாடாளுமன்றத்திலே வைத்த வாக்குறுதி ''இந்தி பேசாத மக்களிடையே இந்தியைத் திணிக்கும் பிரச்சினையே கிடையாது என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். 1965 ஜனவரி 26க்குப் பிறகும் ஆங்கிலம் தொடர்ந்து நீடிக்கும்'' என்பதாகும் !

இந்த உறுதிமொழிகளை வடக்கே இருந்து வருகிறவர்கள்— காங்கிரஸ்காரர்களாக இருந்தாலும் சரி, அல்லது ஜனதா கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி, அல்லது வேறு கட்சிக்காரர்களாக இருந்தாலும் சரி, தமிழகத்திற்கு வந்தால் இந்தியைத் திணிக்கக்கூடாது அல்லது திணிக்க மாட்டோம் என்று சொன்னால்தான் தமிழகத்தைவிட்டு திரும்ப முடியும் என்கின்ற நிலை இன்னமும் இருக்கிறது!

எனவேதான், தமிழகத்தில் நுழைகிற போதெல்லாம், அவர்கள் பிரதமராக இருந்தாலும் பிரதமராக இல்லாவிட்டாலும், மத்திய அமைச்சர்களாக இருந்தாலும் இல்லாவிட்டாலும், அல்லது அரசியல் கட்சியினுடைய பெருந்தலைவராக இருந்தாலும் அல்லது ஒரு சமுதாயத் தலைவராக இருந்தாலும், அவர்கள் இங்கு வருகிற நேரத்தில் மொழிப் பிரச்சினையைப் பொறுத்தவரையிலே, நாங்கள் இந்தியைத் திணிக்க மாட்டோம்; திணிக்க மாட்டோம்'' என்று தான் சொல்வார்கள்.

## இன்று நிலைமை என்ன ?

அவர்கள் அப்படிச் சொன்னதை நாம் நம்பினோம். ஆனால் இன்றைக்கு நிலைமை என்ன ? தளபதி வீரமணி அவர்கள் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள் அண்மையிலே பேசிய உரை ஒன்றினை இங்கே படித்துக் காட்டினார்.

20 — 9 — 85 இந்தியன் எக்ஸ்பிரஸ் ஏட்டில் ராஜீவ்காந்தி யினுடையே பேச்சு விபரம் வெளியிடப்பட்டிருக்கிறது.

Prime Minister Rajiv Gandhi favours a Policy of persuasion to make Hindi popular among the people.

Addressing the 'Raj Bhasha Sammelan' (official language conference) of secretaries and other Government officials, heads of public sector undertakings and nationalised banks, Mr. Rajiv Gandhi called for an all—out effort to secure public support for popularising Hindi as the Government's efforts alone could not get Hindi its rightful place as the official and link language.

The conference was organised by the official Language Department of the Home Ministry.

The Prime minister said while statistics showed that by and large over 80 percent of the Government employees knew Hindi, the use of Hindi in official work was not up to the mark.

அலுவலகங்களிலே எண்பது சதவிகிதம் இந்தி பேசுகிறார்கள் என்று புள்ளி விவரங்கள் காட்டினாலுங்கூட—அலுவலகங்களில் அந்த அளவிற்கு இந்தி சிறப்புடையதாக—உயர்வுடையதாக— முக்கியத்துவம் உடையதாக ஆகியிருக்கிறதா என்றால் இல்லை என்பதை ராஜீவ் காந்தி வருத்தத்தோடு குறிப்பிட்டுவிட்டு

Hence the fault had to be detected and remedial actions taken. He deprecated the tendency among Government servants to register their names as Hindi knowing just for earning extra increments and allowance.

''இதற்கு நிவாரணமான வேலைகளை உடனடியாகச் செய்ய வேண்டும்.

—இது 20-9-85 இந்தியன் எக்ஸ்பிரஸ் ஏட்டில் வெளிவந்த— ராஜீவ்காந்தி இந்திக்கு எந்த அளவுக்கு வக்காலத்து வாங்கியிருக்கின்ருர் என்பதை எடுத்துக் காட்டுகின்ற—உரையாகும்.

இதற்கு மேலும் ஓர் எடுத்துக்காட்டு. ஏன் இந்தி எதிர்ப்புப் போராட்டம் இப்பொழுது தேவைப்படுகிறது? திடீரென்று ஏற்பட்ட உணர்வின் விளைவா என்று யாராவது கேட்பார்களே யானுல், அவர்களுக்குச் சொல்கிறேன்.

## எல்.ஐ.சி யில் இந்தித் திணிப்பு!

என்னுடைய கையிலே இருப்பது பம்பாயிலே இருந்து எல். ஐ. சி. தலைமையகத்திலேயிருந்து வெளியிடப்பட்ட ஓர் உத்தரவு.

Now onwards it is not necessary to ascertain the willingness of the employees for nomination (i) Hindi Classes, (ii) Hindi Typing and (iii) Hindi Stenography.

இதற்கு என்ன பொருள்? இப்பொழுது இந்தி வகுப்புகளுக்குச் செல்வதற்கு, அல்லது இந்தி தட்டச்சுப் பணிகளை ஆற்றுவதற்கு—'ஸ்டெனோ'—இந்தி 'ஸ்டெனோ கிராப் பணிகளை ஆற்றவரும் அலுவலாளர்களை விருப்பம் உண்டா என்று கேட்கத் தேவையில்லை.

At the time of nomination, each employee should be informed in writing that now onwards attendance in Hindi classes during the period of training and appearing in the examinations on conclusion of such training has been made absolutely compulsory and absence therefrom would be treated as dereliction of duty.

கட்டாயம் இந்த பயிற்சியைப் பெருவிட்டால் அவர்கள் தங்கள் கடமையிலிருந்து தவறியவர்கள் ஆவார்கள் என்பதை அந்த அலுவலர்களுக்கு வாய்மூலம்—எழுத்துமூலம் உறுதியாகத் தெரிவித்தாக வேண்டும்.

இது இரண்டாவது கட்டளை.

அடுத்து மற்ருெரு கட்டளை!

If a trainee employee does not attend the classes, he should be warned verbally and then in writing. If however, inspite of this there is no improvement, disciplinary action may be initiated against the concerned trainee—employees.

அப்படி யாராவது பயிற்சி எடுத்துக் கொள்ள வேண்டி யவர்கள் இந்தி வகுப்புகளுக்குச் செல்லாவிட்டால் அவர்கள் முதலிலே வாய்மொழிமூலமாக எச்சரிக்கப்பட வேண்டும். பிறகு எழுத்துமூலம் எச்சரிக்கப்பட வேண்டும். இவைகளிலெல்லாம் எந்தப் பயனும் இல்லாவிட்டால் — அப்போதும் அவர்கள் வகுப்பு களுக்குச் செல்லாமல் இருப்பார்களேயானல் — அவர்கள்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

கடைசியாக

As per the revised instructions received by us from the Government it is now no more necessary to consult the Department of the Official Language before initiating the disciplinary action against such erring trainee—employees.

அப்படி வகுப்புகளுக்குச் செல்லத் தவறுகிற அலுவலாளர் களிலே, அவர்கள் தவறினுர்கள்—செல்லவில்லை என்பதாகக் காரணங் காட்டப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படுமேயானல் அதற்கு இலாகாவிடம் கூட நீங்கள் அனுமதிபெறத் தேவையில்லை.

உடனடியாக நீங்களே ஒழுங்கு நடவடிக்கை எடுக்கலாம் என்கின்ற அளவிற்கு அனுமதியும் தரப்பட்டிருக்கிறது.

நான் பிரதமர் ராஜீவ்காந்தியைப் பார்த்து — இந்திய ஒருமைப்பாடு பேசுகிறவர்களைப் பார்த்து — தேசியம்பேசுகிறவர் களைப் பார்த்து—இந்தி திணிக்கப்பட மாட்டாது என்று உறுதி யளித்தவர்களைப் பார்த்துக் கேட்கிறேன்: இதற்குப் பெயர் என்ன?

இது மறைமுகமாக இந்தியைத் திணிக்கின்ற சூழ்ச்சி அல்லவா? மோசடி அல்லவா? இதற்குப் பிறகும் தமிழகம் பொறுமையோடு இருக்கும் என்று எண்ணுவார்களேயானல் அவர்கள் முட்டாள்கள் அல்லவா?

எனவேதான் திராவிடர் கழகம் நாளைக் காலையிலே தன்னுடைய போர்க் கொடியை உயர்த்துகிறது!

திராவிடர் கழகம் போர்க் கொடியை உயர்த்துகிறது. திராவிட முன்னேற்றக் கழகம், திராவிடர் கழகத்தினுடைய தளபதியையும் வீரர்களையும் வழியனுப்பி வைக்கிறது!

ஒரே படையென்ருல் உங்கள் செய்தி என்ன வென்று எங்களைக் கேட்கலாம். அந்தக்காலத்திலே ''அணி தேர் புரவி ஆட்பெரும் படை'' என்று இருந்தன. இப்பொழுது செல்வது அணி தேர் புரவி என்ருல் அடுத்தப்படை ஆட்பெரும் படையாகத் திராவிட முன்னற்றக் கழகத்தினுடைய படை

ஐந்தாவது கட்டப் போராட்டம் என்றுவிழாத் தலைவர் சொன்னுர். ஐந்தாம் கட்டம் என்பதை அஞ்சாங் கட்டம்என்றும் சொல்லலாம். இது அஞ்சாங் கட்டம் மாத்திரமல்ல; அஞ்சாக் கட்ட முங்கூட !

## உறுதிமொழி காற்றிலே பறக்க விடப்பட்டால்...

இந்தியை இந்தியாவினுடைய இணைப்பு மொழியாக அல்லது தேசிய மொழியாக அல்லது ஆட்சி மொழியாக ஆக்கிடவேண்டும் என்கின்ற முனைப்போடு பிரதமரே, தன்னுடைய பாட்டனுர், அன்னையார், இடையிலே வந்த லால்பகதூர் சாஸ்திரியார் ஆகிய வர்களெல்லாம் தந்த உறுதிமொழிகளையெல்லாம் காற்றிலே பறக்க விட்டு விட்டு, இன்றைக்கு இந்தி பரப்பப்பட வேண்டும் என்பதிலும், அது மறைமுகமாகத் திணிக்கப்பட வேண்டும் என்பதிலும் அக்கறை காட்டுகின்ற காரணத்தால் போராட்டத்தைத் தவிர வேறு வழியில்லை!

கையிலே தார்ச்சட்டியும் தூரிகையுங் கொண்டு நாளைக்கு இந்தி அழிக்கப்படும்! அழிக்கப்படுவது இந்தி எழுத்து! ஆனுல் எழுதப்படுவது தமிழனுடைய எதிர்காலத் தலையெழுத்து! அதை யாரும் மறந்து விடக்கூடாது.

இந்தி, மக்களால் விரும்பப் படக் கூடிய மொழியா ? அது மக்களுடைய ஆதரவினைப் பெற்ற மொழியா? என்கின்ற வினுவினை எழுப்பி தளபதி வீரமணி அதற்கான விளக்கத்தையும் தந்தார்.

போறிஞர் அண்ணு மாநிலங்களவையிலே இந்தியை எதிர்த்துப் பேசிய பொழுது டெல்லியிலே ஒருவர் அண்ணுவைப் பார்த்துக் கேட்டார். ''இந்தியைக் கண்டு ஏன் இப்படி மிரளுகிறீர்கள்? அது மிகச் சுலபமான மொழி; மூன்றே மாதத்தில் கற்றுக் கொள்ள லாம்'' என்ருர்.

''அதற்கு மேல் கற்றுக்கொள்ள அதில் என்ன இருக்கிறது—'' என்று கேட்டார் அண்ணு!

எனவே தொன்மை வாய்ந்த மொழியுமல்ல. இலக்கிய வளமோ இலக்கண நயமோ படைத்த மொழியும் அல்ல, அது இந்த நாட்டிற்கு ஏற்ற மொழியுமல்ல!

மேலெழுந்த வாரியாகப் பார்க்கும் போது இந்தி படித்தால் தானே வேலை — உத்தியோகம் — எதிர்கால வாழ்வு! இந்தி படித்தால்தானே நம்முடைய குடும்பம் வாழ முடியும் என்றெல் லாம் எண்ணத் தோன்றும். ஆனால் அப்படி இந்தி படித்தாலுங் கூட எதிர்காலத்திலே இந்தி படித்த தமிழனுக்கு வேலை கிடைக்காது என்பதை நினைவிலே வைத்துக் கொள்ளுங்கள்!

ஏனென்றால் இந்தியைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள் வடபுலத்திலே ஏராளமானோர்; அதிக விழுக்காட்டுத் தொகை யினர்!

இந்தியைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் அந்தத் தாய் மொழியையே பயிற்று மொழியாக— விஞ்ஞான மொழியாக— ஆராய்ச்சி மொழியாகக் கொண்டு படிக்கின்ற நேரத்தில் அவர்களுக்கு மிக எளிது.

ஆனால், தாய்மொழி தமிழாகவோ மலையாளமாகவோ, கன்னடமாகவோ, தெலுங்காகவோ, மராட்டியமாகவோ கொண் டிருப்பவர்கள், தம்முடைய தாய்மொழியோடு இன்னொரு மொழியைப் படித்தால் தான்— அதிலே அவன் திறமை பெற்றால் தான் வேலைவாய்ப்பு என்றால் அவன் திறமை பெற முடியுமா ?

ஒன்று தாய்மொழியை இழந்து விடவேண்டும். தாய்மொழி யைப் பற்றி எனக்குக் கவலை இல்லை. நான் இந்திக்காரனாகவே இருந்து விட்டுப் போகிறேன்—வடபுலத்தினுடைய அடிமையாக வாழச் சம்மதிக்கிறேன் என்று முறிச்சீட்டு எழுதிக் கொடுக்கின்ற நிலையிலே தன்னைத் தாழ்த்திக் கொண்டால் அல்லாமல், தமிழன் எதிர்காலத்திலே வாழ முடியாது.

நாற்பத்தேழு ஆண்டுக்காலம் இந்தப் போராட்டத்திலே ஊறித் திளைத்து வளர்ந்தவர்கள் இங்கே கூடியிருக்கிறோம். வீரமணி அவர்களுக்கு அப்போது மிகச்சிறுபிராயம் என்றாலுங் கூட, அந்தக் காலத்து இந்தி எதிர்ப்புப் போராட்டத்திலே பங்கு உண்டு.

காங்கிரஸ் இயக்கத்திலே இருந்த என். வி நடராசன் பேரறிஞர் அண்ணா அவர்களோடு தோளோடு தோள் இணைந்து இந்தியை எதிர்க்க— தமிழைக் காப்பாற்றக்— காங்கிரசை உதறி விட்டு வந்தது அந்தக் காலகட்டத்தில்தான்!

காங்கிரஸ் இயக்கத்திலே பெரும் இலக்கியவாதியாகத் திகழ்ந்த நாவலர் பாரதியார் அன்று காங்கிரசை உதறி எறிந்து விட்டுத் தமிழ் இயக்கம் — தமிழர் இயக்கம் என்ற அந்தப் பதாகையின் கீழ் வந்து நின்றதும் அந்த 1938ஆம் ஆண்டுதான்!

## விழிப்புடன் இருந்தால்தான் இந்தி இங்கு நுழையாது!

எனவே 1938 ஆம் ஆண்டு முதல் இன்றுவரை நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற இந்த மொழிப் போராட்ட வரலாற்றில் நாங்களெல்லாம் முழு அத்தியாயங்களாக இல்லா விட்டாலும் சில பக்கங்களாக இருக்கிறோம். அந்தப் பக்கமே வராதவர்கள் சில பேர் நாட்டில் இருக்கத்தான் செய்கிறார்கள்

நான் அவர்களைக் கேலி பேசவில்லை; கிண்டல் செய்யவில்லை. ஆனால் அவர்கள் நம்முடைய போராட்டத்தை மதிக்க வேண்டும்; போராட்டத்தின் நோக்கத்தைப் புரிந்து கொள்ள வேண்டும்.

இன்னுங்கூட அரசியல் சட்டத்திலே நேருவின் வாக்குறுதியை இடம்பெற செய்ய வேண்டும் என்று நாம் சொல்லுகிறோம்.

அரசியல் சட்டத்திலே அப்படி இடம் பெற்றால் கூட நாடாளு மன்றத்திலே கொண்டுவரப் படுகின்ற ஒரு தீர்மானத்தின் மூலம் — சாதாரண சட்டத்தின் மூலம் — ஒரு ஓட்டு மெஜாரிட்டியிலே கூட, மறுபடியும் எல்லாமே இந்திதான்; ஆங்கிலம் கிடையாது என்கின்ற முடிவை நாடாளுமன்றம் எடுக்க முடியும்!

எனவே அரசியல் சட்டத்திலே நேருவின் உறுதி மொழியை இடம்பெறச் செய்யுங்கள் என்று கூறுவது கூட முடிந்த முடிவல்ல. தமிழன் அனுதினமும் அனுப்பொழுதும் எல்லா நேரமும் விழிப்போடிருக்க வேண்டும். கொஞ்சம் கண்ணை மூடினால் இந்தி வந்து நுழைந்துவிடும்.'

எப்போது இந்தி வரும்; எப்படியாகும் தமிழகம் என்று தெரியாது!

மெக்சிகோ நகரத்திலே ஒரு கோடி மக்களில் நிலநடுக்கத்தால் பத்தாயிரம் பேர் மாண்டு மடிந்தார்கள். நிலநடுக்கம் திடீரென்று வந்ததா? இடி விழுவது போலவா? அது கூட அல்ல. நம்மையறியாமலே பூமிக்குள்ளே இருக்கின்ற மண் கொஞ்சம் கொஞ்சமாக இற்று, சக்தி இழந்து, நாம் பாதுகாப்பாக இருக்கிறோம் என்று எண்ணிக்கொண்டிருக்கும் போதே நாம் அறியாமல் பூமிக்கு

அடியிலே — பூமியின் வயிற்றிலே இருக்கிற மண் சக்தி இழந்த காரணத்தால் திடீரென்று ஒருநாள் கீழே இறங்கும்; இறங்குகிற நேரத்திலே பிடிப்பில்லாத மேல்தளம் கீழே அமுங்கும் அது தான் நிலநடுக்கம்!

அதைப் போல நாம் பத்திரமாக இருக்கிறோம் என்று எண்ணிக் கொண்டிருக்கும் போதே நேருவினுடைய உறுதி மொழி, சாஸ்திரியினுடைய — இந்திராவினுடைய உறுதிமொழி என்கிற மேல்மட்ட அளவிலே பத்திரமாக இருக்கிறோம் என்று எண்ணிக்கொண்டு இருக்கிறபோதே, மெக்சிகோவிலே நிலநடுக்கம் ஏற்பட்டதைப் போல தமிழகத்திலே நமது மொழியை அழிக்கக் கூடிய பூகம்பம் ஏற்பட்டு விடக்கூடும்.

அதையும் எச்சரிக்க—தடுத்து நிறுத்தத்தான் தளபதி வீரமணி அவர்களுடைய தலைமையிலே காலையிலே போராட்டம் தொடங்க இருக்கின்றது.

நான் வீரமணி அவர்களுக்கும் உங்களுக்கும் சொல்லிக் கொள்வேன். இந்தப் போராட்டத்தை அரசியல் ஆதாயத்துக்காக நடத்துகிறார்கள் என்று எவரும் குறை கூறி விட முடியாது.

ஒருவேளை தி. மு. கழகம் இந்தப் போராட்டத்திலே இணைந் திருந்தால் அரசியல் ஆதாயத்துக்காக என்று சொல்லக்கூடும். நாங்கள் இணையாமல் சற்று விலகி மறுபடியும் சேரலாம் என்று இருப்பதற்கே காரணம் இது ''அரசியல் ஆதாயம் தேடி நடத்தப் படுகின்ற போராட்டம்'' என்று ஆகிவிடக் கூடாது என்பதற்கா கத்தான்.

இதோ என் கையில் இருப்பது ''Bank of Baroda News'' என்கிற பத்திரிகை — ஆங்கிலம் ஒரு பக்கம் இந்தி ஒரு பக்கம் என்று அச்சாகியிருக்கின்ற பத்திரிகை. இந்தப் பத்திரிகையிலே ஒருபடம். இந்தப் படத்தில் மத்திய ஸ்டேட் அமைச்சர் அந்த வங்கியினுடைய நிர்வாகி ஒருவருக்குப் பரிசு வழங்குகிறார். எதற்காக என்பதற்குக் குறிப்பு எழுதியிருக்கிறார்கள்.

Shri S. S. Master, Our Executive Director, is seen receiving the Union Home Ministry's Shield for outstanding use of Hindi in the official work of the Bank during 1984, from Smt Ram Dulari Sinha, Minister of State for Home, at a special function organised at Vijgyan Bhavan on Feb. 2.

''Report in side'' என்று இருக்கிறதே என்று புரட்டிப் பார்த்தால் இந்தியிலே இருக்கிறது.

ஆக, அந்த வங்கியிலே இந்தியை நுழைப்பதிலே அதி தீவிரமாக முயற்சி எடுத்துக் கொண்டு அதற்காக விருது பெறுகிற விழா டெல்லியிலே உள்ள விஞ்ஞான பவனிலே நடைபெற்று, மத்திய அமைச்சர் ஒருவர் 'இந்தியை அரும்பாடு பட்டு நுழைத்திருக்கிறார்' என்பதற்கான விருதினை வழங்குகிறார் என்றால், இந்தி திணிக்கப்படவில்லை; அல்லது மறைமுகமாக — கொல்லைப் புறமாக அது இந்தி பேசாத மாநில மக்களை அணுகிட வில்லை—என்று யாராவது நம்பிட முடியுமா?

எனவேதான் இந்தப் போராட்டம் தேவைப்படுகிறது. அதற் காகத்தான் திராவிடர் கழகத்தின் போர்க் கொடி உயர்கிறது!

அண்ணா சொன்னதைத் தளபதி வீரமணி இங்கே நினைவூட் டினார். பெரியார் இந்தி எழுத்துக்களை அழிக்கச் சென்றபோது, அதே நாளில், அண்ணா அவர்களும் தேதி குறிப்பிட்டு இந்தி எழுத்துக்களை அழிப்பதற்கு எங்களையெல்லாம் ஆணையிட்டு அனுப்பி வைத்தார்.

இப்போது பெரியார் இல்லை; அண்ணாவும் இல்லை; பெரியாரு டைய வாரிசாகத் திகழ்கின்ற வீரமணி அவர்கள் நாளைக்காலையிலே அந்தப் பெரும் பணியினை நிறைவேற்றச் செல்கிறார்.

இரட்டைக்குழல் துப்பாக்கி திராவிடர் கழகமும் திராவிட முன்னேற்றக் கழகமும்! இருந்தாலும், முதலிலே ஏற்றப்பட்ட கொடி திராவிடர் கழகத்தினுடைய கொடி. எனவே அதற்கு மரியாதை அளிக்கின்ற வகையில் அந்தக் கொடி நிழலிலே போராட்டம் தொடங்கட்டும்! அடுத்து தி. மு. கழகத்தின் கொடி நிழலில் அடுத்த களம் அமையும் என்பதை நான் எடுத்துக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அந்தக் கடமையுணர்ச்சியோடு, களம்புகுகின்ற என் அருமைத் தம்பி — என்னுடைய ஆருயிர் இளவல் — பெரியாரின் வாரிசு — தமிழகத்தினுடைய தன்மானத்தைக் காப்பாற்றப் புறப்பட்டுள்ள தளபதி வீரமணி அவர்களையும், புலவர் கோ மா. நன்னன் அவர் களையும், மற்றும் அவர்களோடு இணைந்து போராட்டத்திலே கலந்து கொள்கின்ற திராவிடர் கழகத்தினுடைய மான மறவர் களையும், தி.மு.கழகத்தின் சார்பாக வாழ்த்தி வழியனுப்புகிறேன்; என்னை வழியனுப்புபவர் யாரோ என்கின்ற ஆவலோடு உங்களை யெல்லாம் வழியனுப்புகின்றேன்.

---

அச்சிட்டோர் : ஜெம் பிரஸ், சென்னை – 1.